# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),**

******

**முறையீட்டு மனு எண்: 31/மா/2020**
**ஆணை நாள்: 09–3–2020**

திரு. எஸ். ரவி,
வடபழனி, சென்னை – 600 026. – **முறையீட்டு மனுதாரர்**

(1) செயற்பொறியாளர்,
(2) உதவி செயற்பொறியாளர்,
(3) உதவி பொறியாளர்,
மண்டலம் -10,
பெருநகர சென்னை மாநகராட்சி. – **எதிர் மனுதாரர்கள்**

சென்னை – 600 026, வடபழனி, பக்தவட்சலம் காலனி, 2வது தெரு, பழைய எண். 02, புதிய எண்.22, என்ற முகவரியில் குடியிருக்கும் திரு. எஸ். ரவி என்பவரது 26.2.2020 நாளிட்ட மனு 27.2.2020 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டு, முறையீட்டு மனு எண். 031/மா/2020 என எண்ணிடப்பட்டு, விசாரணை மேற்கொள்ளப்பட்டு, அறிக்கை பெறப்பட்டு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

## ஆணை:

முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவில், பெருநகர சென்னை மாநகராட்சி, 10வது மண்டலம், 130வது கோட்டம், வடபழனி, கங்கை அம்மன் காலனி, 2வது தெரு, கதவு எண். 7/13 என்ற முகவரியில் விதி மீறி அடுக்குமாடி கட்டம் கட்டப்படுவது தொடர்பாக தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் பொது தகவல் அலுவலர் / செயற்பொறியாளர் 1, மண்டலம் 10 அவர்களிடம் தகவல் அளிக்க கோரி விண்ணப்பித்ததாகவும், அவர் பதில் அளிக்காததால் பொது தகவல் மேல் முறையீட்டு அலுவலரிடம் முறையீடு செய்ததாகவும், அதற்கும் பதில் அளிக்காத நிலையில் மாநில தகவல் ஆணையத்தில் மேல் முறையீடு செய்துள்ளதாகவும், விதிமீறல் அடுக்குமாடி கட்டிடத்தின் மீது நடவடிக்கை எடுக்காத பெருநகர சென்னை மாநகராட்சி 10வது மண்டல செயற்பொறியாளர் திரு.I.பெரியசாமி, உதவி செயற்பொறியாளர், திரு. கோவிந்தசாமி, கோட்ட உதவி பொறியாளர், திரு. கண்ணன் ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்க கோரியுள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சி, 10வது மண்டல அலுவலர் தனது 9.3.2020 நாளிட்ட அறிக்கையில் புகாரில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டிடத்தினை ஆய்வு செய்து கட்டிட உரிமையாளருக்கு 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம், பிரிவுகள் 56, 57 மற்றும் 85ன்படி அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது என்றும், கட்டிட உரிமையாளர் திரு. சிவா ஆனந்த், ஸ்டில்ட் தளத்தில் ஒரு குடியிருப்பு, முதல் தளத்தில் மூன்று குடியிருப்புகள் மற்றும் இரண்டாம் தளத்தில் இரண்டு குடியிருப்புகள் கட்டுவதற்கான கட்டிட அனுமதி பெற்று, அனுமதியின்படி ஸ்டில்ட் தளத்தில் காலியிட ஒதுக்கீடு (Set back) விட்டு கட்டிடம் கட்டியுள்ளார் என்றும் ஆனால் முதல் தளம் மற்றும் இரண்டாம் தளத்தில் பால்கனி (balcony) மற்றும் சன்ஷேட் (Sunshade) விரிவாக்கம் செய்து கட்டியுள்ளார் என்றும் மனுதாரர் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் கோரியிருந்த விவரங்களை பொது தகவல் அலுவலரால் 6.3.2020 அன்று மனுதாரருக்கு அளிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரர் 9.3.2020 அன்று விசாரணைக்கு ஆஜராகி அளித்த வாக்குமூலத்தில் தகவல் பெறும் உரிமை சட்டத்தின் மூலமாக சென்னை மாநகராட்சி, மண்டலம் 10, பொது தகவல் அலுவலர், செயற் பொறியாளர் 1 அவர்களிடம் 21.11.2019 நாளிட்ட மனுவில் சில தகவல்கள் கேட்டிருந்ததாகவும், அதற்கு அவர் பதில் அளிக்கவில்லை என்றும், 2.1.2020 அன்று பொது தகவல் மேல்முறையீட்டு அலுவலரிடம் முதல் மேல்முறையீடு மனு அனுப்பியதாகவும். அதற்கும் பதில் அளிக்கவில்லை என்றும், பிறகு 19.2.2020 அன்று மாநில தகவல் ஆணையருக்கு 2வது மேல் முறையீட்டு மனு அனுப்பியுள்ளதாகவும், தெரிவித்து கட்டிட அனுமதி வழங்கிய சென்னை மாநகராட்சி, மண்டலம் 10 செயற் பொறியாளர் திரு. பெரியசாமி, உதவி செயற் பொறியாளர் திரு. கோவிந்தசாமி, 130வது வட்ட கோட்ட உதவி பொறியாளர் திரு. கண்ணன் ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்க கோரினார்.

பெருநகர சென்னை மாநகராட்சி 10வது மண்டல செயற்பொறியாளர் திரு.I.பெரியசாமி உதவி செயற்பொறியாளர் திரு. கோவிந்தசாமி மற்றும் 130வது கோட்ட உதவி பொறியாளர் திரு. கண்ணன் ஆகியோர் அளித்த வாக்குமூலத்தில் மனுதாரர் இதுபோன்று புகார் மனுக்களை பணத்தை எதிர்பார்த்து எழுதும் பழக்கம் உடையவர் என்றும், முகவரியை மாற்றி அவர் பெயரிலேயே பல கடிதங்கள் அனுப்பியுள்ளார் என்றும், மேலும், வேறு பெயர்களிலும் புகார் எழுதுவார் என்றும், தகவல் அறியும் உரிமை சட்டத்தில் அவர் 26.02.2020-ல் கோரிய தகவல்களுக்கு மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டிடம் பூட்டி இருந்ததால் அளவுகள் எடுக்கமுடியாததால், தற்பொழுது அளவு எடுத்து 6.3.2020 அன்று மனுதாரருக்கு தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் தகவல் அளிக்கப்பட்டுவிட்டது என்றும், மனுதாரர் கட்டிடங்களுக்கு வண்ணம் பூசும் பணி செய்பவர் என்றும், தற்பொழுது அந்த வேலைகளை விட்டுவிட்டு மனு எழுதும் வேலைகளை செய்கிறார் என்றும், அவருக்கு எழுத தெரியாது என்றும், யாரையாவது வைத்து மனுவை எழுதுவார் என்றும் தெரிவித்தனர்.

இந்நேர்வில், முறையீட்டு மனுதாரரின் கோரிக்கை, வாக்குமூலம், மண்டல அலுவலர் அறிக்கை, எதிர்மனுதாரர்களின் வாக்குமூலம் அனைத்தும் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. எதிர்மனுதாரர்கள் விசாரணையின் போது, முறையீட்டு மனுதாரர் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் கோரிய தகவல்கள் பொதுத் தகவல் அலுவலரால் அளிக்கப்பட்டுள்ளது

என தெரிவித்துள்ளனர். முறையீட்டு மனுதாரருக்கு தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் தகவல் அளிக்கப்பட்டுள்ளதும், மனுதாரர் மாநில தகவல் ஆணையத்தில் மேல்முறையீடு செய்துள்ளார் என்பதும், விதிமீறி கட்டப்பட்டுள்ள கட்டிடத்தின் மீது மாநகராட்சியால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதும் விசாரணை மற்றும் அறிக்கை வாயிலாக தெரியவருகிறது. எனவே, இம்மனு மீதான தொடர் நடவடிக்கையினை இந்நிலையிலேயே கைவிடலாமென முடிவு செய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2020 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 9–ஆம் நாளன்று என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//––

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. திரு. எஸ். ரவி,
   பழைய எண். 2, புதிய எண். 22,
   பக்தவட்சலம் காலனி, 2வது தெரு,
   வடபழனி, சென்னை – 600 026.

2. செயற்பொறியாளர்,
   மண்டலம் 10, பெருநகர சென்னை மாநகராட்சி,
   எண்.117, என்.எஸ்.கே. காலனி,
   கோடம்பாக்கம், சென்னை – 600 024.

3. உதவி செயற்பொறியாளர்,
   மண்டலம் 10, பெருநகர சென்னை மாநகராட்சி,
   எண்.117, என்.எஸ்.கே. காலனி,
   கோடம்பாக்கம், சென்னை – 600 024.

4. உதவி பொறியாளர்,
   கோட்டம் - 130, மண்டலம் - 10,
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   எண்.117, என்.எஸ்.கே. காலனி,
   கோடம்பாக்கம், சென்னை – 600 024.

5. மண்டல அலுவலர்,
   மண்டலம் 10, பெருநகர சென்னை மாநகராட்சி
   எண்.117, என்.எஸ்.கே. காலனி,
   கோடம்பாக்கம், சென்னை – 600 024.

நகல்

முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு 3
இ.கோ./ உதிரிகள்